(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 35.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 திசெம்பர் 12, சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

82/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மசகெண்ணெய்யை இறக்குமதி செய்கின்ற நாடுகள் யாவை;

(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்படி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்யின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமெரிக்கா ஈரானுக்கு தடை விதிக்க உடன்முந்திய இரண்டு வருடங்களில் இலங்கை ஈரானில் இருந்து பெற்றுக்கொண்ட மசகெண்ணெய் பீப்பாய்களின் எண்ணிக்கை யாது;

(ii) தடைவிதித்த பின்னர் ஈரானில் இருந்து பெற்றுக்கொண்ட எண்ணெய்யின் அளவுக்குச் சமமான எண்ணெய் எந்நாட்டிலிருந்து பெறப்படுகின்றது;

(iii) மூன்றாம் தரப்பினர் ஒருவர் ஊடாக ஈரானிய எண்ணெய் இந்நாட்டுக்கு தருவிக்கப்பட்டதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நாளொன்றுக்கு தேவைப்படுகின்ற மசகெண்ணெய் பீப்பாய்களின் எண்ணிக்கை யாது;

(ii) தட்டுப்பாடின்றி இலங்கைக்கு அவசியமான அளவு எண்ணெய்யை பெற்றுக்கொடுப்பதற்கு வழங்கலாளர்களான நாடுகளுக்கு கடந்த இரண்டு வருடங்களில் இயலுமாயிருந்ததா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

190/ ' 15

2.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்றதா;

(ii) இப்பாடசாலை அமைந்துள்ள நிலப்பரப்பு எவ்வளவு;

(iii) இக்காணி கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா ;

(iv) ஆமெனில், யாரினால் கையளிக்கப்பட்டது ; கையளிக்கப்பட்ட திகதி யாது;

(v) இப் பாடசாலையில் இருக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(vi) பாடசாலையில் ஒவ்வொரு தரத்திலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இப்பாடசாலை சார்பில் பாதுகாப்பு அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) ஒரு மாணவரிடம் வருடமொன்றுக்கு அறவிடப்படும் பணத் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட பாடசாலையின் பாடசாலை முகாமைத்துவ சபை உறுப்பினர்களின் பெயர் மற்றும் பாதுகாப்புப் படைகளில் இவர்கள் வகிக்கும் பதவி யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

205/ '15

3.

கௌரவ எம். எச். எம் சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மடவல கடைவீதி, பங்களாகெதர, 21 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஏ.எம். சஹாப்தீன், க/மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் தொழிலாளராக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பணிபுரிகின்றார் என்பதையும்;

(ii) இவரின் சேவை மற்றும் சேவைக்காலத்தை கவனத்திற்கொண்டு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் சேவையில் அமர்த்துவதற்காக உரிய ஆவணங்கள் அடிக்கடி மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இறுதியாக, 2014.11.18ஆம் திகதிய விண்ணப்பப்படிவம், அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. சஹாப்தீனுக்கு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் தொழிலாளர் பதவியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

229/ '15

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கியில் உள்ளக உத்தியோகத்தர் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான (2014) போட்டிப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் அநீதிகள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014.06.08 ஆந் திகதி களனிப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) දූර/2002 சுற்றறிக்கையின் படி இலங்கை வங்கியின் அனைத்து உள்ளக பதவியுயர்வுகளின் முறையியலொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அனைத்துப் பாடங்களுக்கும் 40 என்ற புள்ளிகளின் வரையறை 50 ஆக அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இது தொடர்பாக பரீட்சார்த்திகள் முன்கூட்டியே விழிப்புணர்வூட்டப் பட்டிருந்தார்களா என்பதையும்;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியலுக்கமைய இந்த பரீட்சை நடத்தப்பட்டுள்ளதென உடன்படுகின்றீரா என்பதையும்;

(iv) பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குவதற்கு 5 மாதங்கள் கடந்துள்ளதுடன் பெறுபேறுகளை மீண்டும் மதிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(v) பாதிக்கப்பட்ட இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

83/ ’15

5.

கௌரவ புத்திக பத்திரண,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்கள் தொடர்பான தொகை மதிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) வட மாகாணத்தில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேலே குறிப்பிட்டவாறான தொகை மதிப்பொன்று நடத்தப்பட்டிராவிடின் அத்தகைய ஒன்றினை நடத்துவாரா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் தமிழ் பிக்குமார்கள் உள்ளனரா;

(ii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த மக்களுக்கு தமது சமய நடவடிக்கைகளில் ஈடுபடவும் அறநெறிக் கல்வியைப் பெறவும் அவசியமான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எவ்விதமாக;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட பதினெட்டாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 11).

* 2.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது சிபாரிசின் பேரில் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஜூன் 08 ஆம் திகதிய 1918/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மின்சாரம் (மின் பரிசோதகர்களின் பணிகளும், கடமைகளும் மற்றும் நடவடிக்கை முறைகளும்) தொடர்பான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்திப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் கட்டார் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2012 மே 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜனவரி 03 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜூன் 10 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 4),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் எகிப்து அராபியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 மாச்சு 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 5),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைத் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 நவெம்பர் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 6),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 7),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1986 மாச்சு 13 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 8),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மலேசியா அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1982 ஏப்பிரல் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 9),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 10),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜூலை 25 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 11),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2011 மாச்சு 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 12),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1997 ஜனவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---